## "தென்கிழக்குப் பல்கலைக்கழக நூலகம் இஸ்லாமிய கற்கை நெறியைப்பயிலும் பட்டதாரி மாணவர்களின் தகவல் சேவையை நிறைவு செய்கின்றதா: ஒரு விமர்சன மதிப்பீட்டு ஆய்வு"

**Supervisor**
*Dr.M.I.M.Jazeel*
*Senior Lecturer,*
*Faculty of Islamic studies &*
*Arabic Language*

**Researcher**
*Ms. A.H.F. Nismiya*
*Department of Islamic Studies,*
*Faculty of Islamic studies &*
*Arabic Language*

பல்கலைக்கழக நூலகமானது தனது வாசகர்களின் கல்வி, கற்றல், கற்பித்தல், ஆராய்ச்சி, சமூக வேலைத்திட்டங்களின் மேம்பாடு போன்றவற்றிக்கு பொருத்தமான தகவல்களையும், நூலக சேவைகளையும் வழங்குவது முக்கிய கடமையாகும்.

"தென்கிழக்குப் பல்கழலக்கழக நூலகம் இஸ்லாமிய கற்கை நெறியைப்பயிலும் பட்டதாரி மாணவர்களின் தகவல் சேவையை நிறைவு செய்கின்றதா: ஒரு விமர்சன மதிப்பீட்டு ஆய்வு" என்ற தலைப்பில் மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வின் நோக்கமானது தென்கிழக்குப் பல்கலைக்கழக இஸ்லாமிய கற்கைநெறிக்குரிய சேர்மானங்களை மதிப்பிட்டு, நூலகமானது பாவனையாளர் சமூகத்திற்கு உதவும் வகையில் திருப்திப்படுத்தும் வகையில் நூலக சேவையினை வழங்குகின்றதா? என்பதனை ஆய்வு செய்வதாகும்.

இவ்வாய்வில் முதலாம் நிலைத் தரவுகள் பயன்படுத்தப்பட்டதோடு (Survey reach) அளவைசார் ஆய்வு முறையினூடாக இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆய்வுக்குத் தேவையான தரவுகலானது நேர்காணல், records available in library மூலமும், இஸ்லாமிய கற்கைகள் துறையின் 48 மாணவர்களுக்கு வினாக்கொத்துக்கள் வழங்கி பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் இவ்வாய்வானது excel மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன.

ஆய்வின் மதிப்பீட்டு அடிப்படையின் படி 54 வீதமான நூலக சேர்மானங்கள் அறபு மொழியிலும், 27 வீதமான அளவு ஆங்கில மொழியிலும், 19 வீதமான அளவு தமிழ் மொழியிலும், 0.25 வீதமான நூலகச் சேர்மானங்கள் சிங்கள மொழியில் காணப்பட்டாலும் அதிகமான நூலகச் சேர்மானங்கள் அறபு மொழியிலே காணப்படுவது மதிப்பீட்டின் மூலம் இனங்காணப்பட்டுள்ளது, அத்தோடு 48 பாவனையானர்களிடமிருந்து பெறப்பட்ட தகவல்களின் பகுப்பாய்வின் படி தென்கிழக்குப் பல்கலைக்கழக நூலகம் இஸ்லாமிய கற்கைநெறி பயிலும் பட்டதாரி மாணவர்களின் தகவல் சேவையை ஓரளவு நிறைவு செய்கின்றது என்பதும் கண்டறியப்பட்டுள்ளது. இவ்வாய்வில் நூலகத்தின் தகவல் சேவைகள் பற்றிய குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதோடு, இது தொடர்பான எதிர்கால மதிப்பீட்டு ஆய்வுத் திட்டங்களுக்கான விரிவான தகவல்களை சேகரிப்பதற்கான சில கருத்துக்களையும், நூலக சேவைகள் விஸ்தரிக்கப்பட வேண்டியதற்கான பரிந்துரைகளையும் இவ்வாய்வு முன்வைக்கின்றது.

***Keywords:*** நூலகம், நூலக சேர்மானங்கள், சேவைகள், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்